7-ஆம் வகுப்பு - சமூக அறிவியல்
புதிய கலைத் திட்டமும், பாடத்திட்டமும் - 2004 - 2005 கல்வியாண்டு முதல் நடைமுறைக்குரியது

அ. சமூக அறிவியலில் வரலாறு, சமூகவியல், பொருளாதாரம், குடிமையியல் மற்றும் புவியியல் பகுதிகள் அடங்கியுள்ளன

ஆ. விரிவான நோக்கம் : மாணவர்கள் நற்குடிகளாகவும், சமூக விழிப்புணர்வு பெற்றவர்களாகவும், சமூக மேம்பாட்டில் ஈடுபாடு கொள்பவர்களாகவும் உருவாக்கப் பெறல்

இ. மதிப்பீடு : I. வரலாறு : 40 மதிப்பெண்கள், II. குடிமையியல் : 20 மதிப்பெண்கள், III. புவியியல் 40 மதிப்பெண்கள் - மொத்தம் 100 மதிப்பெண்கள்

I. தமிழ்நாடு வரலாறு - சோழர்கள் முதல் தொண்டைமான்கள் வரை (சமூகம், பொருளாதாரம், பண்பாடு) 68 - பாட வேளைகள் (திருப்புதல், தேர்வு பிறவும் சேர்த்து)					
அலகு/ பாட எண்.	எதிர்பார்க்கும் கற்றல் அடைவுகள்	பாடத்திட்டம்	1. கற்பித்தல் முறை 2. செய்முறை பயிற்சி 3. மதிப்பீடு	1. கற்பித்தல் உதவிப்பொருட்கள்/ ஊடகம் 2. விளக்க வகைகள்	பாட வேளை
I.1.	1. மாணவர் சோழர் சான்றுகள் பற்றிய அறிவினைப் பெறல் 2. சோழர்கள் ஆண்ட பகுதிகளைப் புரிந்து கொள்ளுதல் 3. சோழர் வரலாற்றுக்கான சான்றுகளை விளக்கும் திறன் பெறல்	சோழர் காலம் - சான்றுகள் - அரசர்கள்	1. சோழர் சான்றுகளை கல்வெட்டுக்கள், செப்பேடுகள்,. நாணயங்கள், இலக்கியங்கள் என வகைப்படுத்தி விளக்குதல் 2. மாணவர் சோழப் பேரரசின் எல்லைகளையும் தலைநகரையும் குறிப்பிடல் 3. சான்றுகள் பற்றிய மாணவர் அறிவினை வாய்மொழி தேர்வு மூலம் மதிப்பிடல்	1. செப்பேடுகள், நாணயங்கள், சோழர் கால நினைவுக் கட்டடங்களின் படங்களைப் பயன்படுத்துதல்	6
I. 2	1. மாணவர் சோழர் நிர்வாகம் பற்றிய அறிவினைப் பெறல் 2. உள்ளாட்சி நிர்வாகத்தினைப் புரிந்து கொள்ளுதல் 3. சோழர் நிர்வாகத்தினை விளக்கும் திறன் பெறல்	சோழர் நிர்வாகம் - உள்ளாட்சி முறை (குடவோலை முறை)	1. சோழர் நிர்வாகத்தினை வண்ணத்தாளில் வரைந்து விளக்குதல் 2. தமிழ்நாடு வரைபடத்தில் மாணவர் சோழர் நிர்வாக மண்டலங்களைக் குறிப்பிடுதல் 3. மாணவர் இத்தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுதல் - 10 மதிப்பெண்கள் வழங்குதல்	1. தமிழ்நாடு வரைபடத்தினைப் பயன்படுத்தி சோழப் பேரரசின் எல்லைகளைக் குறித்தல் 2. உள்ளாட்சி அமைப்பு செயல்பட்ட விதத்தினை மாணவர்கள் நடித்தல்	8
I. 3	1. மாணவர் சோழர்களின் கீழ் மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கை பற்றிய அறிவினைப் பெறல் 2. சோழர்களின் கீழ் மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையினை	சோழர்களின் கீழ் மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கை	1. சோழர்களின் கீழ் மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையை விளக்குதல் 2. மாணவர் இத்தலைப்பில் கட்டுரை எழுதுதல் 3. இத்தலைப்பில் தேர்வும் 10 மதிப்பெண்கள் வழங்கலும்	1. சோழ நாணயங்கள், எடைகள், அளவைகளின் படங்களைப் பயன்படுத்துதல் 2. சோழர் கோயில்கள், சமயத்	8

	விவரிக்கும் திறன் பெறல்			தலைவர்களின் படங்களைப் பயன்படுத்துதல்	
I. 4	1. மாணவர் சோழர்களின் கீழ் பண்பாட்டு வளர்ச்சி பற்றிய அறிவினைப் பெறல் 2. சோழர் கால இலக்கியங்களை மாணவர் அடையாளம் செய்தல் 3. சோழர்கள் கீழ் பண்பாடு வளர்ச்சி பற்றி விவரிக்கும் திறன் பெறல்	சோழர் கால பண்பாட்டு வளர்ச்சி - இலக்கியம், கலை, கட்டடக் கலை	1. அக்கால இலக்கியங்களை விளக்கி சோழர் கலை, கட்டடக் கலையின் முக்கிய அம்சங்களை விளக்குதல் 2. சோழர் கால நினைவுக் கட்டடங்கள் உள்ள பகுதிகளுக்கு மாணவரை சென்று வருமாறு ஊக்குவித்தல் ?? தமிழ்நாடு வரை படத்தில் சோழர் நிவைுக் கட்டடங்கள் அமைந்துள்ள இடங்களை மாணவர் குறிப்பிடுதல் 3. அலகுத் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. சோழர் கோயில்களின் படங்களைப் பயன்படுத்துதல் 2. சோழர் ஓவியங்கள் வரை படங்கள், இசைக்கருவிகளின் படங்களைப் பயன்படுத்துதல் ?? சோழர் இலக்கியங்கள் சிலவற்றை காண்பித்தல்	8
II. 5	1. மாணவர் இரண்டாம் பாண்டியப் பேரரசு பற்றிய சான்றுகளைப் புரிந்து கொள்ளுதல் 2. மாணவர் பாண்டிய அரசர்கள் ஆண்ட பகுதிகளை அடையாளம் காணும் திறன் பெறல் 3. சான்றுகளை விவரிக்கும் திறன் பெறல்	இரண்டாம் பாண்டியப்பேரரசு - சான்றுகள் - ஆட்சியாளர்கள்	1. இரண்டாம் பாண்டியப் பேரரசு பற்றிய சான்றுகளை வரிசைப் படுத்தி விளக்குதல் 2. மாணவர் தமிழ்நாடு வரை படத்தில் பாண்டியர் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுதல் 3. வாய்மொழித் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. பாண்டியப் பேரரசின் பரப்பினைக் குறிக்க தமிழ்நாடு வரைப்படத்தினை பயன்படுத்துதல் 2. செப்பேடுகள், நாணயங்களின் படங்களை பயன்படுத்துதல்	5
II. 6	1. மாணவர் கலை, கட்டடக் கலைக்கு பாண்டியர் ஆற்றிய தொண்டினைப் புரிந்துக் கொள்ளுதல் 2. பாண்டியர் கால இலக்கியங்களை அடையாளம் கண்டு கொள்ளுதல் 3. பாண்டியர் கீழ் இலக்கியம் கலை, கட்டடக்கலை வளர்ச்சியை விவரிக்கும் திறன் பெறல்	பாண்டியர்கள் கீழ் இலக்கியம் கலை, கட்டடக்கலை வளர்ச்சி	1. பாண்டியர் கீழ் இலக்கியம் கலை, கட்டடக்கலை வளர்ச்சியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல் 2. மாணவர் பாண்டியர் கால இலக்கியங்களை வரிசைப்படுத்துதல் 3. இத்தலைப்பில் தேர்வு நடத்துதல் - 10 மதிப்பெண்கள் வழங்குதல்	1. தமிழ்நாடு வரைபடத்தினைப் பயன்படுத்தி பாண்டியப் பேரரசின் பரப்பினை வரைதல் 2. பாண்டியர் கால இலக்கிய நூல்களை மாணவருக்கு காண்பித்தல்	5
III. 7	1. மாணவர் விஜய நகர ஆட்சியின் போது தமிழ்நாட்டில் ஏற்பட்ட தாக்கத்தினைப் புரிந்து கொள்ளுதல்	விஜய நகரப் பேரரசின் கீழ் தமிழ்நாடு - சமூக,	1. தாக்கத்தினை எடுத்துக் காட்டுடன் விளக்குதல் ?? தமிழ்நாடு வரைபடத்தில் விஜய நகர அரசர்கள் வென்ற பகுதிகளைக்	1. தமிழ்நாடு வரை -படத்தில் விஜய நகர ஆட்சியில் இருந்த	5

	2. அக்காலத்தில் தமிழ் சமுதாயத்தில் ஏற்பட்ட புதிய சமூக பழக்க வழக்கங்களை அடையாளம் காணுதல் 3. விஜய நகர ஆட்சியின் போது தமிழ் சமுதாயத்தில் ஏற்பட்ட தாக்கத்தினை விளக்கும் திறன் பெறல்	பண்பாட்டு தாக்கம்	குறிப்பிடுதல். 2. மாணவர் தமிழ் நாடு வரைபடத்தில் விஜய நகர அரசர்கள் வென்ற பகுதிகளைக் குறிப்பிடல் 3. தலைப்பில் மாணவர் கட்டுரை எழுதுதல் - 10 மதிப்பெண்கள் வழங்குதல்	தமிழ்நாடு பகுதிகளை குறிப்பிடுதல் 2. விஜய நகர அரசர்கள் நாணயங்கள், ஓவியங்கள் வரைபடங்கள், கோயில்கள் மற்றும் நினைவுக் கட்டடங்களின் படங்களைப் பயன்படுத்துதல்	
III.8	1. மாணவர் தமிழ் நாட்டில் நாயக்க ஆட்சியாளர்களின் வரலாறு பற்றிய அறிவினைப் பெறல் 2. நாயக்கர் கால சமூக, பண்பாட்டு நிலைமையினைப் புரிந்து கொள்ளுதல் 3. நாயக்கர்களின் கீழ் சமூக, பண்பாட்டு நிலையினை விவரிக்கும் திறன் பெறல்	நாயக்கர் ஆட்சியின் கீழ் தமிழ்நாடு - மதுரை, தஞ்சாவூர், செஞ்சி, வேலூர் நாயக்க அரசுகள் - சமூக, பண்பாட்டு நிலைமை	1. நாயக்கர்களின் கீழ் மக்களின் சமூக, பண்பாட்டு நிலைமைகளில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை விளக்குதல் 2. மாணவரை மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகாலைக் கண்டு வர ஊக்குவித்து நாயக்கர்கள் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை கவனிக்கச் செய்தல் 3. மாணவர் ஒரு கட்டுரை எழுதுதல் - 10 மதிப்பெண்கள்	1. தமிழ்நாடு வரை படத்தினை பயன்படுத்தி நாயக்கர்கள் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுதல் 2. மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகால் படத்தினை பயன்படுத்துதல்	5
IV. 9	1. மாணவர் தமிழ்நாட்டில் மராத்திய ஆட்சி பற்றிய அறிவினைப் பெறல் 2. மராத்தியர் கீழ் பண்பாட்டு வளர்ச்சியினைப் புரிந்துக் கொள்ளுதல் 3. மராத்திய அரசர்கள் பண்பாட்டிற்கு ஆற்றிய தொண்டினை விளக்கும் திறன் பெறல்	மராத்திய ஆட்சி - பண்பாடு - இலக்கிய மற்றும் கலை வளர்ச்சி	1. தமிழ்நாடு வரைபடத்தில் மராத்தியர் தமிழ் நாட்டில் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிட்டு விளக்குதல் 2. மாணவரை தஞ்சாவூரிலுள்ள சரஸ்வதி மகாலுக்குச் சென்று பண்பாட்டிற்கு மராத்தியர் ஆற்றிய தொண்டினைக் காண ஊக்குவித்தல் 3. வாய்மொழி தேர்வு - 10 மதிப்பெண்கள்	1. தமிழ்நாடு வரைபடத்தினைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் மராத்தியர் ஆண்ட பகுதியைக் காண்பித்தல் 2. சரபோஜி மன்னர்களின் படங்களையும் தொண்டுகளையும் விளக்கும் படங்களைப் பயன்படுத்துதல்	8
IV. 10	1. சேதுபதிகள், தொண்டைமான்கள், நவாபுகளின் கீழ் தமிழ்நாட்டின் நிலை பற்றிய அறிவினை	சேதுபதிகள், தொண்டைமான்கள், நவாபுகள் ஆட்சியின்	1. தமிழ்நாடு வரைபடத்தில் இவ்வரசர்கள் ஆண்ட பகுதிகளைக் குறித்து விளக்குதல் 2. மாணவர் தம் பகுதி	1. சேதுபதிகள் தொண்டைமான்கள், நவாபுகள் ஆண்டபகுதிக	10

	மாணவர் பெறல் 2. இவ்வாட்சியாளர்கள் ஆண்ட பகுதிகளைப் புரிந்து கொள்ளுதல் 3. இவ்வாட்சியாளர்களின் கீழ் மக்களின் சமூக வாழ்க்கையை விளக்கும் திறன் பெறல்	கீழ் மக்களின் சமூக வாழ்க்கை	கடந்த காலத்தில் யாருடைய ஆட்சியிலிருந்ததென்பதை அடையாளம் காணுதல். 3. அலகுத் தேர்வு : 10 மதிப்பெண்கள்	ளைக் குறிப்பிட தமிழ்நாடு வரைபடத்தினைப் பயன்படுத்துதல் 2. இவ்வரசர்களின் படங்கள், அரண்மனைகளின் படங்கள் கிடைக்குமாயின் அவற்றைப் பயன்படுத்துதல்	
II. குடிமையியல் - 34 பாட வேளைகள் (திருப்புதல், தேர்வு பிறவும் சேர்த்து)					
I. 1	1. மாணவர் தனது தாய் நாடு பற்றிய அறிவினைப் பெறல் 2. மாணவர் தேசப் பற்று பெறல் 3. மாணவர் தனது தேசம், தேசிய சின்னங்களை விளக்கும் திறன் பெறல்	நமது தேசம் - தேசிய சின்னங்கள்	1. தேசம் என்பதன் பொருளை மற்ற தேசங்களை உதாரணம் கூறி விளக்குதல் 2. மாணவர் தேசியக் கொடி, சக்கரம், அசோக சிங்கங்கள், தேசியப் பறவை மயில், இந்திய அரசு சின்னங்கள் போன்றவைகளின் படங்களைச் சேகரித்தல் 3. வாய்மொழித் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. இந்திய வரைபடம் - மாநிலங்கள், தலை நகரங்கள் வெவ்வேறு வண்ணங்களில் 2. தேசிய சின்னங்கள், இலச்சினைகளின் படங்கள்	5
I. 2	1. மாணவர் தாம் இந்தியர் எனும் விழிப்புணர்வு பெறல் 2. சமுதாயத்தில் தனக்குள்ள பங்கினை புரிந்து கொள்ளுதல் 3. சமுதாய உணர்வின் தேவையை வெளிப்படுத்தும் திறன் பெறல்	சமுதாய உணர்வு	1. சமுதாய உணர்வுக்காக உழைத்த தலைவர்களை எடுத்துக்காட்டாக கூறி விளக்குதல் 2. மாணவர் சமுதாய உணர்வினை உருவாக்க வழிமுறைகளைக் கூறுதல் 3. எழுத்துத் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. தனிப்பட்டவர்களின் சமுதாயப் பங்கினை மாணவர் ஈடுபாட்டுடன் நடிக்கச் செய்தல்	5
I.3	1. மாணவர் இந்தியா ஒரு சமயச் சார்பற்ற நாடு என்பதைப் புரிந்து கொள்ளுதல் 2. வேற்றுமையில் ஒற்றுமையை அடைய சமய சார்பின்மையின் தேவையை மாணவர் விவரிக்கும் திறன் பெறல்	அரசின் சமய சார்பின்மைக் கொள்கை	1. சமயச்சார்பின்மை கொள்கையை விளக்கி இந்தியாவில் அதன் தேவையைக் கூறுதல் 2. மாணவர் தமது பகுதியில் வாழும் பல்வேறு சமய மக்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல். ??மாணவர் சமூக நல்லிணக்கத்திற்கான வழிமுறைகளைக் கூறுதல் 3. அலகுத் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. வெவ்வேறு கடவுள்கள், சமயத்தலைவர்கள், சமய மக்களின் படங்களைப் பயன்படுத்துதல் 2. வேற்றுமையில் ஒற்றுமையின் பொருளை விளக்க படங்களை பயன்படுத்துதல்	5
II. 4	1. மக்களாட்சியின் பொருளை மாணவர் புரிந்து கொள்ளுதல்	மக்களாட்சி - பொருள் - விளக்கம்	1. ? லிங்கனை மேற்கோள் காட்டி மக்களாட்சியை விளக்குதல்	1. பாராளுமன்றம் - மாநில சட்டமன்றம்	5

	2. மாணவர் நேர்முக - மறைமுக மக்களாட்சி பற்றிய அறிவினைப் பெறல 3. மக்களாட்சியின் நிறை குறைகளை மாணவர் விளக்கும் திறன் பெறல்	நேர்முக - மறைமுக மக்களாட்சி	? மற்ற அரசு அமைப்புகளான மன்னராட்சி, சர்வாதிகாரம், மேற்குடியாட்சி, எதேச்சதிகாரம், சமதர்மம் ஆகியனவற்றையும் விளக்குதல் 2. மாணவர் வேறுபாடுகளை எழுதுதல். 3. அலகுத் தேர்வு : 10 மதிப்பெண்கள்	படங்களைப் பயன்படுத்துதல் - மக்களவை அங்கத்தினர்கள் - மாநிலங்களவை அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் படும் முறையை விளக்குதல் 2. அரசியலமைப்பு முறைகளுடன் சில நாடுகளை வரிசைப்படுத்துதல்	
II. 5	1. மாணவர் அரசியல் கட்சிகளின் பங்கு பற்றிய அறிவினைப் பெறல் 2. மாணவர் அரசியல் கட்சிகளின் பணிகளைப் புரிந்துக் கொள்ளுதல் 3. மாணவர் தேசிய மாநிலக் கட்சிகளின் பங்கினை விளக்கும் திறன் பெறல்	அரசியல் கட்சிகள் - பங்கு - தேசிய, மாநிலக் கட்சிகள் - பணிகள்	1. மக்களை நெறிப்படுத்துவதில் அரசியல் கட்சிகளின் பங்கினை விளக்குதல் - சில குறிப்பிட்ட கொள்கைகளுக்கு மக்களின் சிந்தனையை உருவாக்குவதை உதாரணம் கூறல் 2. மாணவர் இந்தியாவிலுள்ள தேசிய மாநிலக் கட்சிகளை வரிசைப் படுத்துதல் 3. வாய்மொழித் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. இந்தியாவின் தேசிய மாநில கட்சிக்கொடிகளின் படங்களைப் பயன்படுத்துதல் 2. தேசிய , மாநிலக் கட்சிகளின் தலைவர்கள் படங்களை பயன்படுத்துதல்	6
II. 6	1. மாணவர் மனித உரிமைகள் பற்றிய அறிவினைப் பெறல் 2. மாணவர் சிறார்களின் உரிமைகளைப் புரிந்து கொள்ளுதல் 3. சிறார் உரிமைகளை விளக்கும் திறன் பெறல்	மனித உரிமைகள் என்றால் என்ன? சிறார்களின் உரிமைகள்	1. ஐநா.வின் மனித உரிமைகள், சிறார்களின் உரிமைகள் மீதான பிரகடனங்களை விளக்குதல் 2. மாணவர் சிறார் உரிமைகளை வரிசைப் படுத்துதல் 3. அலகுத் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. ஐநா.வின் மனித உரிமைகள் ஆணைய சின்னத்தின் படத்தினை பயன்படுத்துல் 2. சிறார் உரிமைகளுடன் தொடர்புடைய படங்களைப் பயன்படுத்துதல்	8